Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 68 · புதன்கிழமை Wednesday · 07.01.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# உறுதியளிக்கப்பட்ட புதிய ஓய்வூதிய திட்டம் தமிழக அமைச்சரவை ஒப்புதல்




சென்னை:

மிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் 20 ஆண்டு கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் என்ற புதிய திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ளார். அதன்படி, ரூ.25 லட்சம் வரை பணிக்கொடை, இறுதி சம்பளத்தில் 50 சதவீதம் வரை ஓய்வூதியம் வழங்கப்படும்.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:கடந்த 2021-ம்ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றது முதல், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைக் காக்க தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. தமிழகம் முன்னெப்போதும் கண்டிராத வளர்ச்சியை எட்டியிருப்பினும்,மத்திய அரசின் வரிப்பகிர்வு தொடர்ந்து குறைப்பது,

திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதி குறைக்கப்படுவது அல்லது முறையாக விடுவிக்கப்படாமல் இருப்பது, ஜிஎஸ்டி மாற்றங்களால் குறைந்து வரும் மாநில வரி வருவாய், உயர்ந்து வரும் நலத்திட்டச் செலவுகள் போன்றவற்றால் அரசுக்கு நிதிச்சுமை உள்ளது.

அவற்றை எல்லாம் தாண்டி, தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களை முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து காத்து வருகிறார். அந்த வகையில், கரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட அகவிலைப்படி உயர்வு, ஈட்டியவிடுப்பு ஒப்படைப்பு நடைமுறை, அரசு ஊழியர்கள் விபத்தில் உயிரிழந்தால் ரூ.1 கோடி, இயற்கை மரணத்துக்கு ரூ.10 லட்சம், கல்வி முன்பணம், திருமணமுன்பணம், வீடு கட்டுவதற்கான முன்பணம் உயர்வு, ஓய்வுபெறும்நாளில் சஸ்பெண்ட் சூழல் நீக்கம், பணிக்கொடை ரூ.25 லட்சமாக உயர்வு, ஓய்வூதியர்கள் மருத்துவ காப்பீடு, பொங்கல் பரிசுத் தொகை உயர்வு, மகப்பேறு உயர்வு போன்றவை அமல்படுத் தப்பட்டுள்ளன.

இந் நிலையில் உறுதியளிக்கப்பட்ட புதிய ஓய்வூதிய திட்டத்துக்கு தமிழக அமைச்சரவை இன்று ஒப்புதல் வழங்கி உள்ளது.


அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு பதில்,. புதியதாக உருவாக்கப்பட்டு உள்ள தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை ஜன.3ம் தேதி முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். முதல்வர் அறிவிப்பை தொடர்ந்து போராட்டத்தை பெரும்பாலான ஆசிரியர்கள் கைவிட்டுள்ளனர்.

ஆனால் இடைநிலை ஆசிரியர்கள் மட்டும் சம வேலைக்குசமஊதியம் என்று போராட்டத்தை தொடர்ந்துள்ளனர். இந் நிலையில், உறுதியளிக்கப்பட்ட புதிய ஓய்வூதிய திட்டத்துக்கு முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தமிழக அமைச்சரவை இன்று ஒப்புதல் வழங்கி உள்ளது.

அமைச்சரவை ஒப்புதலை தொடர்ந்து, புதிய ஓய்வூதிய திட்டத்துக்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு, வரும் நிதியாண்டு முதல் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. மேலும் அமைச்சரவை கூட்டத்தில் புதிய தொழில்கொள்கைகள், தூய்மை பணியாளர்கள் போராட்டம் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

# தி.மு.க. ஆட்சியில் ரூ.4 லட்சம் கோடி ஊழல்: விசாரணை நடத்த கவர்னர் ரவியிடம் வலியுறுத்தல்

## அ.தி.மு.க. பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி பேட்டி



சென்னை,

அதிமுகபொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி கவர்னர் ஆர்.என். ரவியை இன்று சந்தித்து திமுக அமைச்சர்கள் மீதான ஊழல் பட்டியலை புத்தகமாக ஆதாரத்துடன் தயாரித்து வழங்கினார். அவருடன் முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, திண்டுக்கல் சீனிவாசன் உள்ளிட்டோர் சென்றனர்.

சந்திப்புக்கு பிறகு வெளியே வந்த எடப்பாடி பழனிசாமி நிருபர்களிடம் கூறியதாவது:-

"இன்றைய தினம் கவர்னரை சந்தித்து 2021 முதல் திமுக ஆட்சியில் நடந்த ஊழல் பட்டியலை வழங்கினோம். கடந்த 4½ ஆண்டில் பல்வேறு துறைகளில் நடந்த ஊழலை அவரிடம் ஆதாரத்துடன் விளக்கினோம். உரிய ஆதாரம் உள்ளதால் உடனடியாக விசாரணை நடத்தவும் கவர்னரிடம் கோரிக்கை வைத்தோம். கடந்த 4½ ஆண்டுகளில் திமுக அரசு கோடிக்கணக்கில் கொள்ளையடித்து, தமிழகத்தை கடனில் ஆழ்த்தியுள்ளது. 56 மாதங்களில் ஆண்டுக்கு ரூ.1 லட்சம் கோடி கடன் வாங்கியுள்ளது. இதுவரை ரூ.4 லட்சம் கோடி கடன் அளவு உயர்ந்துள்ளது.

சபரீசன், உதயநிதி ரூ.30 ஆயிரம் கோடியை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் உள்ளதாக அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் கூறினார். ஒரு ஆண்டில் இவ்வளவு பணம் என்றால், 4½ ஆண்டில் எவ்வளவு கொள்ளையடித்து இருப்பார்கள்.

விஞ்ஞான முறையில் திமுக ஊழல் செய்து வருகிறது. துறை வாரியாக நடந்த ஊழல் என்று பார்த்தால்,நகராட்சி நிர்வாகத்துறையில் ரூ.64 ஆயிரம் கோடி, சுரங்கத்துறையில் ரூ.60 ஆயிரம்கோடி,டாஸ்மாக் துறையில் ரூ.50 ஆயிரம் கோடி, பத்திரப்பதிவு துறையில் ரூ.20 ஆயிரம்கோடி,தொழில்துறையில் ரூ.10 ஆயிரம் கோடி, வேளாண்மை துறையில் ரூ.5 ஆயிரம் கோடி, விளையாட்டு துறையில் ரூ.500 கோடி, உயர்கல்வித் துறையில் ரூ.1,500 கோடி என பல்வேறு துறைகளில் ஊழல் நடந்துள்ளது. ஊழலுக்கான ஆதாரத்தையும் கவர்னரிடம் கொடுத்துள்ளோம்.ரூ.4லட்சம்கோடி ஊழலை விசாரணை கமிஷன் அமைத்து விசாரிக்க கோரியுள்ளோம். ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி தலைமையில் இந்த விசாரணையை நடத்த வேண்டும் என்றும் கூறியுள்ளோம்.

தமிழகத்திற்கு வந்த தொழில் முதலீடுகள் அண்டை மாநிலம் நோக்கி சென்று விட்டன.

கிட்னி திருட்டு விவகாரத்தில் திமுக அரசு என்ன செய்தது? சட்டமன்ற தேர்தல் காரணமாக மாணவர்களுக்கு தற்போது லேப்டாப் கொடுத்துள்ளனர்.2021-ல் பொங்கல் பரிசாக ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும் என அன்று மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார். ஆனால் தற்போது பொங்கல் பரிசாக ரூ.3 ஆயிரம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார். ஏன் ரூ.5 ஆயிரம் அறிவிக்கவில்லை. திமுகவுக்கு தோல்வி பயம் வந்துவிட்டது. தோல்வி பயம் காரணமாக அடுத்தடுத்த அறிவிப்புகளை திமுக வெளியிடுகிறது. தமிழகம் போராட்டக்களமாக மாறியுள்ளது. ஊழல்செய்துள்ள திமுக அரசுக்கு சட்டமன்ற தேர்தலில் மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள். வருகிற தேர்தலில் அதிமுக பெரும் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும்."

இவ்வாறு அவர் பேசினார்.

# ஜனவரி 9ந் தேதி முதல் கனமழைக்கு எச்சரிக்கை; ராமநாதபுரம் மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை; சூறாவளி காற்று 65 கி.மீ வேகம் வரை வீசக்கூடும்



சென்னை: கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை,வேலூர், சென்னை, திருவள்ளூர் ஆகிய 11 மாவட்டங்களில் வரும் ஜனவரி 11ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

ஜனவரி 9ம் தேதி

மிக கனமழை (ஆரஞ்சு அலெர்ட்) பெய்ய வாய்ப்புள்ள மாவட்டங்கள்:

* புதுக்கோட்டை
* தஞ்சாவூர்
* திருவாரூர்
* நாகப்பட்டினம்
* மயிலாடுதுறை

கனமழை (மஞ்சள் அலெர்ட்) பெய்ய வாய்ப்புள்ள மாவட்டங்கள்:

* ராமநாதபுரம்
* சிவகங்கை
* திருச்சி
* அரியலூர்
கடலூர்
* விழுப்புரம்
* செங்கல்பட்டு

ஜனவரி 10ம் தேதி

மிக கனமழை (ஆரஞ்சு அலெர்ட்) பெய்ய வாய்ப்புள்ள மாவட்டங்கள்:

* கடலூர்
* விழுப்புரம்
* செங்கல்பட்டு

ராமநாதபுரம் மாவட்டம் பாக் நீரிணை கடற்பகுதியில் சூறாவளிக் காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ.வேகத்தில் வீசக்கூடும். அதிகப்பட்சமாக 65 கி.மீ வேகம் வரை வீசக்கூடும் என்றும், கடல் அலை 3.0 மீட்டர் வரையிலும் எழக் கூடும் என்பதால் பாக் நீரிணை கடற்பகுதியில் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மேலும், மறு அறிவிப்பு வரும்மீனவர்கள் யாரும் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்றும், தங்களது மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அனைத்தையும் பாதுகாப்பாக வைத்திடவும் மீன்வளத் துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் பாக் நீரிணை கடற்பகுதியில் மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்க வேண்டாம் எனவும் வலியுறுத்தப்பட்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேசுவரம், மண்டபம், தேவிபட்டினம்,தொண்டி,எஸ்.பி பட்டினம் உள்ளிட்ட மீன்பிடித் துறைமுகங்களிலிருந்து நாளை (புதன்கிழமை) கடலுக்குச் செல்ல அனுமதி டோக்கன் வழங்கப்பட மாட்டாது, என மீன்வளத் துறையினர் அறிவித்துள்ளனர்.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt




தென்காசி மாவட்டம், சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (05.01.2026) நடைபெற்ற அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், முதற்கட்டமாக 604 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணியை வழங்கினார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் அவர்கள், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பழனி நாடார் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

# சென்னையில் கனிமொழி எம்.பி.க்கு மேயர் ஜெகன் பெரியசாமி பிறந்தநாள் வாழ்த்து



நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழு தலைவரும், தென் மண்டல தேர்தல் பொறுப்பாளரும், கழக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திராவிட நாயகர் தளபதியாரல் நடைபெற இருக்கின்ற 2026 தமிழக சட்டமன்ற தேர்தலின் கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவின் தலைவருமான கனிமொழி எம்.பியை சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும் தூத்துக்குடி மாநகராட்சி மேயருமான ஜெகன் பொியசாமி நேரில் சந்தித்து அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறினார்.

# ஓமலூரில் உள்ள நியாய விலை கடைகளுக்கு லாரிகள் மூலம் கரும்பு விநியோகம்



தமிழக அரசு ரேஷன் அட்டைதாரர்களுக்கு தமிழர் திருநாளான தை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஒரு கிலோ பச்சரிசி,ஒருகிலோசர்க்கரை, ஒரு முழு நீள கரும்பு மற்றும் ரூ.3000 ரொக்கப் பரிசு தமிழக அரசு சார்பில் வழங்கபட உள்ளது.இதற்காக ஓமலூர் பகுதிகளில் உள்ள தொளசம்பட்டி,அமரகுந்தி போன்ற நியாய விலை கடைகளுக்கு லாரிகள் மூலமாக கரும்பு உள்ளிட்ட பரிசு பொருட்கள் கொண்டுவரப்பட்டு, ரேஷன் அட்டைதாரர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இரக்கப்பட்டது.இந்த பரிசுப் பொரட்கள் வருகின்றஜனவரி8ஆம்தேதி வியாழக்கிழமை முதல் ரேஷன் அட்டைதாரர்களுக்கு நியாய விலை கடைமூலமாகவழங்கப்பட உள்ளன.

# கோவைக்கு வந்த கராத்தே தியாகராஜனை மரியாதை நிமித்தமாக சிஹான் ஜெமிஷா மற்றும் கலீல்ரகுமான் சந்திந்து வாழ்த்து கூறினார்



நீலகிரி மாவட்டத்தில் நடைபெறும் கராத்தே மாஸ்டர் சாதிக் பாட்ஷா இல்ல திருமண நிகழ்ச்சி மேட்டுப்பாளையத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக கராத்தே தியாகராஜன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் முன்னதாக சிஹான்.ஜெமிஷா மற்றும் சென்னை கராத்தே மாஸ்டர்கலீல்ரகுமான்ஆகியோர்மரியாதைநிமித்தமாககராத்தே தியாகராஜனை சந்தித்து பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர் இந்நிகழ்ச்சியில் 100க்கும் மேற்பட்ட கராத்தே மாஸ்டர்கள் கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




தென்காசி மாவட்டம், சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (05.01.2026) நடைபெற்ற அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர்,இ.ஆ.ப., அவர்கள் முதற்கட்டமாக 604 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணியை வழங்கினார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் அவர்கள், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பழனி நாடார் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

PRO TENKASI | வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை

@pro tenkasi | pro tenkasi | protenkasi

## உலகம் உங்கள் கையில் நிகழ்ச்சியின் மூலம்

# சேலம் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளைச் சேர்ந்த 5,000 மாணவர்களுக்கு மடிக்கணினிகள்

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்

சேலம் இரும்பாலை சாலையில் அமைந்துள்ள அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் (05.012026) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராசேந்திரன் அவர்கள் தலைமையில் சேலம் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளைச் சேர்ந்த 5,000 மாணவ மாணவியர்களில் முதற்கட்டமாக 1965 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குப்பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் மாநில அளவிலான உலகம் உங்கள் கையில் என்ற விழாவில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு 10இலட்சம் மடிக்கணிணிகள் வழங்கும் திட்டத்தின் தொடங்கி வைத்தார்கள். லகம் உங்கள் கையில்" என்பது மாணவர்களின் கைகளில் எதிர்காலம் உள்ளது என்பதையும். அதை மேம்படுத்தும் விதமாக இன்றைய இளைய தலைமுறையினரின் மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்காக அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு மடிக்கணிணி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் கல்லூரி மா மாணவிகள் சிறப்பாக பயின்று. வேலைவாய்ப்பினை பெற்று பல்வேறு துறைகளில் ஊக்குவிக்குப்பதே சாதனை புரிய ஊக்குவிப்பதே முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கல்லூரி மாணவர்களுக்குக் கணினி கல்வியை எளிதாக்குதல், மாணவர்களுக்கு கணினி திறனை மேம்படுத்த வன்பொருள் மற்றும் மென்பொருளுடன் கூடிய மடிக்கணினிகள் வழங்குதல், மாணவர்களுக்கு கணினி கல்வி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கி தொழில்முனைவோராக மாற்றுதல் மற்றும் ஆராய்ச்சி துறையில் சாதிக்க துடிக்கும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவித்தல் ஆகும்.

சேலம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 104 மாணவியர்களுக்கும் சேலம், கருமந்துறை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 135 மாணவ மாணவியர்களுக்கும். மேட்டூர் அணை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 246 மாணவ மாணவியர்களுக்கும் வழங்கப்படுகிறது.

மேலும், சேலம் அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் 457 மாணவ மாணவியர்களுக்கும். சேலம் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 37 மான மாணவியர்களுக்கும். சேலம் செவிலியர் பயிற்சி பள்ளி மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரியில் 80 மாணவியர்களுக்கும் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் 205 மாணவ மாணவியர்களுக்கும் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரியில் 286 மாணவ மாணவியர்களுக்கும், தியாகராஜர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் 730 மாணவ மாணவியர்களுக்கும் என மொத்தம் 5,009 மாணவ மாணவியர்களில் முதற்கட்டமாக 1966 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படுகிறது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராசேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.



இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர்.சிவலிங்கம் மாவட்ட வருவாய் அலுவ இரா. ரவிக்குமார். சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவம முதல்வர் மருதேவினோன்.வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அ.ஜெய்கணேஷ் சேலம் அரசு மகளிர் கலை கல்லூரி முதல்வர் முனைவர் நாகாந்தி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மாணவ மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டன.





ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட முதன்மை நீதிபதி எஸ்.சமீனா மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆகியோர் 9 வது சித்த மருத்துவ தின விழா மற்றும் மாவட்ட சித்த மருத்துவ அலுவலகத்தினை திறந்து வைத்தார்கள்



தலைமைச்செயலகத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் நன்றித் தெரிவித்தபோது எடுத்த படம்.

## உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கிளியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில்

# மின்சாதன பொருட்களை அடித்து உடைத்து சேதப்படுத்திய மர்ம நபர்கள்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கிளியூர் கிராமத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது இந்த பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர் இந்த நிலையில் கடந்த 10 நாட்களாக அரையாண்டு விடுமுறை அறிவிக்கப்பட்ட நிலையில் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் யாரும் வரவில்லை மேலும் பள்ளிக்கு காவலாளியும் இல்லை இந்த நிலையில் தொடர் விடுமுறை காலங்களில் பள்ளியின் உள்ளே சென்ற மர்ம நபர்கள் வகுப்பறைகளின் பூட்டுகளை உடைத்து வகுப்பறைகளில் இருந்த ஆறு மின்விசிறிகள் 10க்கும் மேற்பட்ட மின்விளக்குகள் 4 சுற்று போர்டு ஆகியவற்றை அடித்து உடைத்ததோடு மகளிர் கழிப்பறைகதவுகளைஅடித்துசேதப்படுத்திஉள்ளனர் மேலும் வகுப்பறைகளுக்குள் இருந்த புத்தகங்களை கிழித்து எறிந்து சேதப்படுத்தி உள்ளனர் இதுகுறித்து பள்ளியின் தலைமை ஆசிரியர் மஞ்சள் மாதா களமருதூர் காவல் நிலையத்தில் புகார் செய்தார் அதன் பேயரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விடுமுறை காலங்களில் அத்துமீறி பள்ளிகளுக்குள் புகுந்து மின்சாதன பொருட்களை சேதப்படுத்திய மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

# ஈரோடு ரெயில் நிலையத்திற்கு 'தந்தை பெரியார்' பெயர் சூட்டக் கோரிக்கை:

## முதல்வர் ஸ்டாலினுக்கு ஈரோடு மாநகராட்சி மண்டலத் தலைவர் மனு



ஈரோடு: நூற்றாண்டு காணும் ஈரோடு இரயில் நிலையத்திற்கு சமூக சீர்திருத்தவாதிதந்தை பெரியாரின் பெயரைச் சூட்ட வேண்டும் என ஈரோடு மாநகராட்சி 1-வது மண்டலத் தலைவரும், சேலம் கோட்ட இரயில்வே ஆலோசனைக் குழு உறுப்பினருமான ப.க. பழனிச்சாமி, தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில் அவர் குறிப்பிட்டுள்ள தாவது:- "ஈரோட்டில் இருந்து திருச்சிக்கு இரயில் பாதை அமைக்க ஆங்கிலேய அரசு திட்டமிட்டு, கடந்த 1-1-1868 அன்று போக்குவரத்து தொடங்கியது. போதிய இடவசதி இல்லாத காரணத்தால், புதிய தண்டவாளம் மற்றும் இரயில் நிலையம் அமைக்க கூடுதல் நிலம் தேவைப்பட்டது. அப்போது தற்போதைய இரயில் நிலையம் அமைந்துள்ள பகுதி, ஈரோட்டின் மிகப்பெரிய விவசாயியான ஈ.எம். அண்ணாமலை பிள்ளை என்பவருக்குச் சொந்தமாக இருந்தது. நிலத்தை வழங்க அவர் மறுத்து வந்த நிலையில், அவரின் நண்பரான தந்தை பெரியார் தலையிட்டு, நகரின் வளர்ச்சி மற்றும் இரயில் நிலையத்தின் அவசியத்தை எடுத்துக்கூறி அந்த நிலத்தைப் பெற்றுத் தந்தார்.

மேலும், நில உரிமையாளருக்கு அப்போதே 1 லட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையையும் பெரியார் பெற்றுக்கொடுத்தார்.

தந்தை பெரியாரின் பெருமுயற்சியால், சுரங்கப்பாதை உள்ளிட்ட நவீன வசதிகளுடன் 1925-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இந்த இரயில் நிலையம், தற்போது தனது 100-வது ஆண்டில் கால்பதிக்கிறது. ஈரோடு நகரின் அடையாளமாகவும், அதன் வளர்ச்சிக்கு அடித்தளமாகவும் விளங்கும் இந்த இரயில் நிலையத்திற்கு, அதனை உருவாக்குவதற்கு முக்கியக் காரணமாக இருந்த 'தந்தை பெரியார்' அவர்களின் பெயரைச் சூட்டுவது அவருக்குச் செய்யும் மிகச்சிறந்த கௌரவமாக அமையும். எனவே, இதற்கான உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டும்" என அந்த மனுவில் அவர் வலியுறுத்தியுள்ளார்.



## தூத்துக்குடி கணேசன் நகரில் உள்ள சின்னமணி பள்ளியில்

# மாணவர்களுக்கு 143 பேருக்கு பேக், நோட்டு புத்தகங்களை அதிமுக முன்னாள் அமைச்சர் சி.த.செல்லபாண்டியன் வழங்கினார்

தமிழகத்தில் அரையாண்டு தேர்வு முடிந்து திங்கட்கிழமை பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு தேவையான பேக் நோட்டு புத்தகம் பேனா பென்சில் உள்ளிட்ட பொருட்கள் பல்வேறு சமூக ஆர்வலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி தூத்துக்குடி கணேசன் நகரில் உள்ள சின்னமணி பள்ளியில் படிக்கும் 143 மாணவ மாணவிகளுக்கு அதிமுக மாநில வர்த்தக அணி செயலாளரும். முன்னாள் அமைச்சருமான சி.த.செல்லபாண்டியன் தன் சொந்த செலவில் ஸ்கூல் பேக் நோட்டு பேனா பென்சில் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார். பள்ளி துவங்கிய இரண்டாவது நாளிலேயே புது ஸ்கூல்பேக் நோட்டு பேனா பென்சில் உள்ளிட்ட பொருட்களை அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லபாண்டியன் வழங்கியதை குழந்தைகள் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் தெற்கு மாவட்ட அதிமுக துணைச் செயலாளர் சந்தானம், முன்னாள் மீனவர் கூட்டுறவு சங்க தலைவர் அகஸ்டின், போக்குவரத்து தொழிற்சங்கத்தை சோ'ந்த சங்கர் பள்ளியின் தலைமை ஆசிரியர் ரெங்கநாதன், சென்னை டேனியல் டிரஸ்டி சோ'மன் தேவேந்திரன், மற்றும் மகேஷ்குமா', ஆசிரிய பெருமக்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## சோமையம்பாளையம் ஆர்.ஜி.ஸ்போர்ட்ஸ் அகாடமியில்

# அமரர் ராமலிங்கம் மற்றும் அமரர் ராஜேந்திரன் நினைவு மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டிகள் நடைபெற்றது



கோவை கணுவாய் அருகே சோமையம்பாளையத்தில் கிராமப்புற கல்வி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அறக்கட்டளை, ஆர் ஜி ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து, கைப்பந்து விளையாட்டில் ஜாம்பவான்களாகத் திகழ்ந்த அமரர் வி சி ராமலிங்கம் மற்றும் அமரர் என் ராஜேந்திரன் ஆகியோரின் நினைவாக, 14 மற்றும் 19 வயதுக்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கான பள்ளிகளுக்கு இடையேயான மாவட்ட அளவிலான கைப்பந்துப் போட்டிகளை நடத்தினர்.

கைப்பந்து விளையாட்டில் ஜாம்பவான்களாகத் திகழ்ந்த அமரர் வி சி ராமலிங்கம் மற்றும் அமரர் என் ராஜேந்திரன் ஆகியோரின் நினைவாக, 14 மற்றும் 19 வயதுக்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கான பள்ளிகளுக்கு இடையேயான மாவட்ட அளவிலான கைப்பந்துப் போட்டிகளை,கிராமப்புற கல்வி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அறக்கட்டளை, ஆர் ஜி ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து 3 நாட்கள் நடத்துகிறது.

கோவை கணுவாய் அருகே உள்ள ஆர் ஜி ஸ்போர்ட்ஸ் அகாடமி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியின் தொடக்க விழாவில் ரெசெட் மற்றும் ஆர் ஜி ஸ்போர்ட்ஸ் அகாடமியின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி எஸ் ஆர் ஆறுச்சாமி கூட்டத்தினரை வரவேற்றார்.

தொடர்ந்து கைப்பந்து ஜாம்பவான்களான அமரர் வி சி ராமலிங்கம் மற்றும் அமரர் என் ராஜேந்திரன் ஆகியோரின் திரு உருவப்படங்களுக்கு மலர்கள் தூவி மரியாதை செய்தனர்.

போட்டிகளை கீர்த்திமான் மெட்ரிகுலேஷன் பள்ளியின் தாளாளர் ஏ கோகுல் கிருஷ்ணன், முன்னாள் இந்திய கைப்பந்து வீராங்கனையும், ஆன்ட் அறக்கட்டளை மற்றும் தொண்டு நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலருமான லதா ஏ ஜி உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு விளையாட்டு வீரர்களுக்கு கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்து போட்டியை தொடங்கி வைத்தனர்.

மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 60 சிறுவர் மற்றும் சிறுமியர் இந்த நாக் அவுட் மற்றும் லீக் போட்டிகளில் பங்கேற்றனர். எஸ் வி ஜி வி, கீர்த்திமான் மேல்நிலைப்பள்ளி, கிரசென்ட் மேல்நிலைப்பள்ளி மற்றும் அகர்வால் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகள் லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

இவ்விழாவில் விஜயலட்சுமி ராமலிங்கம், சரஸ்வதி சீனிவாசா, முன்னாள் இந்திய கடற்படை கைப்பந்து பயிற்சியாளர் வி ஜெயபிரகாஷ், ஸ்டேட் பேங்க் ஆ:ப் இந்தியாவின் ஆஸ்வான் மற்றும் ஓய்வுபெற்ற வருமான வரி அதிகாரி கிருபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை நடத்தினர்.



ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர்/ துணைத்தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ் , மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (05.01.2026) அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரவலசு ஊராட்சியில் துணை ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தினை ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் சென்னிமலை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# தூத்துக்குடியில் "உலகம் உங்கள் கையில்" திட்டத்தின் கீழ் 1,887 கல்லூரி மாணவ, மாணவர்களுக்கு மடிக்கணினிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நேற்று சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல்முன்னேற்றத்திற்காக முதல் கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் "உலகம் உங்கள் கையில்" திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்டத்தில் வ.உ.சி. பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தலைமையில் மடிக்கணினிகளை வழங்கினார்.

விழாவில் அமைச்சர் கீதா ஜீவன் பேசுகையில், "நல்ல ஒரு திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார். குறிப்பாக நாம் எப்பொழுதும் கணினியுகம் என்று குறிப்பிடுவோம். தற்பொழுது அதற்கும் முன்னேறிய நிலையில் ஏஐயுகம் என்று குறிப்பிடுகிறார்கள். ஏஐ உலகம் என்று குறிப்பிடுகின்ற வகையில் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதற்கேற்றவாறு நீங்கள் அனைவரும் உங்களை தயார் செய்து கொள்ள வேண்டும். வெறுமனே புத்தகத்தை மட்டும் படிக்காதீர்கள். உங்களுக்கு மடிக்கணினி வழங்குகிறார்கள் என்றால், அதனை நல்ல முறையில் உபயோகப்படுத்துங்கள்.

நிச்சயமாக இந்த மடிக்கணினி உங்களுடைய கல்விக்கும், வேலைவாய்ப்புக்கும், மேலும் உங்களை நீங்கள் முன்னேறிக் கொள்ளக்கூடிய அளவிற்கு உபயோகமாக இருக்கும். தமிழ்நாடு முதலமைச்சர் குறிப்பிடுவதுபோல் இதனை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். தமிழ்நாடு, திட்டங்களை நிறைவேற்றியதில் இந்திய அளவில் ஒரு சிறந்த மாநிலமாக திகழ்கிறது. குறிப்பாக ஒரு புதிய வார்த்தைக்கு பொருள் கண்டுபிடிப்பதற்கு அகராதியை தேடுவோம்.

அதுபோல் என்னவொரு புதிய திட்டம் செயல்படுத்த வேண்டுமென்றாலும், தமிழ்நாடு அரசினுடைய திட்டங்களை நமது இந்தியாவின் பிற மாநிலங்கள் தேடிக் கண்டுபிடித்து செயல்படுத்துகிறது. அதில் குறிப்பாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம் என்று குறிப்பிடுகின்ற அந்த வரிசையில் இன்றையதினம் உலகம் உங்கள் கையில் என்ற சிறப்பான திட்டத்தை செயல்படுத்தி, நவீன வசதிகளுடன் கூடிய மடிக்கணினியில் அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளுடைய 6 மாத சந்தாவை அரசே செலுத்தி, ஏஐ வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

அதுபோல் மென்பொருள் உருவாக்கம் (Software Development), தரவு உள்ளீடு (Data Entry), டிஜிட்டல் சந்தைப்படுத்தல் (Digital Marketing), வரைகலை வடிவமைப்பு (Graphic Design), குறியிடுதல் (Coding), வலை வடிவமைப்பு (Web Designing), செயற்கை நுண்ணறிவு கருவிகள் (AITools) உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய உயர்வகை மடிக்கணினியை தமிழ்நாடு முதலமைச்சர் உங்களுக்காக வழங்குகிறார்கள்.

நீங்கள் மடிக்கணினியை பெற்று நல்ல முறையில் பயனடையுங்கள். காலத்தை வீணாக்காதீர்கள். காலம் பொன் போன்றது. இந்த வயதில் தான் நீங்கள் படிக்க முடியும். அனைத்து மாணவர்களுக்கும் நல்ல எதிர்காலம் அமைய வேண்டும் என சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல், விவசாயம், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்துறைப் பயிற்சி போன்ற அனைத்துத் துறைகள் சார்ந்த 1887 மாணவ மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் மி.பிரபு, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) நாகராஜன், துணை மேயர் செ. ஜெனிட்டா, துணை ஆட்சியர் (பயிற்சி) மகேந்திரன், கல்லூரி முதல்வர், மாணவ மாணவியர்கள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவையில் சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பின் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது




கோயம்புத்தூர் பத்திரிக்கையாளர் மன்றத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அந்த அமைப்பின் மாநில தலைவர் முகமது ரியாஸ் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர் எங்கள் அறிக்கை இளைஞர்கள் நலன் சார்ந்து வெளியிடபட்டுள்ளது. நாங்கள் கட்சி சார்ந்து அறிக்கையை வெளியிடவில்லை நாங்கள் தேர்தலில் போட்டியிடவில்லை எங்களுடைய அறிக்கையை அனைத்து கட்சிகளிடமும் வழங்க உள்ளோம் என தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் யூத் கமிஷன் தேவைப்படுகிறது என கேட்டுக்கொண்ட அவர் தமிழகத்தில் தொடர்ச்சியாக வேலை இழப்புகள் இருந்து வருவதாகவும் வருடம் தோறும் ஐந்து சதவிகிதம் இளைஞர்களுக்கு வேலை இழப்பு ஏற்படுவதாக கூறினார். எனவே மதிப்பெண் அடிப்படையிலான கல்வி மட்டும் இளைஞர்களுக்கு போதாது அதை தாண்டி திறன் அடிப்படையிலான கல்வி தேவைப்படுகிறது என்றார். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளூர் தொழில் வாய்ப்புகளை முன்னிலைப்படுத்த வேண்டும் என்றார்.

ஐடி தொழில்துறை சார்ந்துமட்டும்அனைத்தையும் நிறைவு படுத்த முடியும் என்று அரசு நினைப்பதற்கு ஆட்சேபனை தெரிவிப்பதாகவும் கூறினார். அந்தந்த மாவட்டத்தில் உள்ள தொழில் துறை சார்ந்து Youth Resource Centre உருவாக்கி அந்தந்த மாவட்ட இளைஞர்கள் அந்த மாவட்டத்திலேயே வேலை வாய்ப்புகளை பெறுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

அனைத்து தரப்பு இளைஞர்களிடமும் கருத்துக்கள் கேட்கப்பட்டு தான் இந்த தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அவர் இஸ்லாமிய இளைஞர்கள் மீதான இஸ்லாமிய ஃபோபியா போலவே தலித் இளைஞர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக தெரிவித்தார். முதல்வர் அறிவித்த அறிவிப்புகள் எல்லாம் சட்ட ரீதியாக அமல்படுத்த வேண்டும் என்றார்.

பெண்களை முன்னிலைப்படுத்தி பல்வேறு அறிவிப்புகள் வெளியிடும் பட்சத்தில் இளைஞர்கள் பற்றி யாரும் பேசுவதில்லை என தெரிவித்தார். மேலும் தமிழகத்தில் இதெல்லாம் மாவட்டங்களை காட்டிலும் கோவை மாவட்டத்தில் போதை பொருட்கள் என்பது அதிகமாக உள்ளதாக அந்த இயக்கத்தினர் தெரிவித்தனர்.

## உளுந்தூர்பேட்டை அருகே உள்ள புகைப்பட்டி கிராமத்தில்

# சாலை விரிவாக்க பணிகளை தடுத்து நிறுத்தி கிராம மக்கள் சாலை மறியல்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள ஆசனூர் கிராமத்தில் இருந்து புகைப்பட்டி வழியாக திருக்கோவிலூர் வரை சாலை விரிவாக்க பணிகள் நடைபெற்று வருகிறது இந்த நிலையில் புகைபட்டி கிராமத்தில் சாலையின் ஒருபுறம் மட்டும் விட்டுவிட்டு கழிவுநீர் கால்வாய் கட்டப்பட்டுள்ளது இதனால் மழைக்காலங்களில் கழிவுநீர் கால்வாய் நிரம்பி வழிந்து வீடுகளுக்குள் கழிவுநீர் புகுந்ததால் பொதுமக்கள் கடுமையாக அவதிப்பட்டனர் இந்த நிலையில் இன்று மீண்டும் சாலை விரிவாக்க பணிகள் நடைபெற்று வந்தது அப்போது அங்கு சென்ற 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாலை விரிவாக்க பணிகளை தடுத்து நிறுத்தியதோடு இரு புறமும் கழிவுநீர் கால்வாய் வசதியை ஏற்படுத்திவிட்டு சாலை விரிவாக்கப் பணிகளை செய்ய வேண்டும் என வழியுறுத்தி திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் இதனால் திருச்சி வேலூர் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது இது பற்றி தகவல் அறிந்த எலவனாசூர்கோட்டை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கழிவுநீர் கால்வாய் வசதி ஏற்படுத்துவது குறித்து நெடுஞ்சாலைத்துறை உயர் அதிகாரிகளிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததன் பேரில் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்..

# செட்டிநாடு கிளை கழக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது



சாக்கோட்டை மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிநாடு கிளை கழக - கூட்டுக்கொல்லை பகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (04.01.2026) ஞாயிற்றுக்கிழமை வேளாண்மை கல்லூரி அருகே உள்ள கூட்டுக்கொல்லையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டம்செட்டிநாடுகிளைகழகசெயலாளர்திரு. சிவசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட சாக்கோட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் திரு. க. சரத்பாலமுருகன், DHM., B.Sc., கட்சியின் கட்டமைப்பை வலுப்படுத்துதல், வருங்கால தேர்தல் பணிகள் மற்றும் மக்கள் விரும்பும் முதல்வர் வேட்பாளர் தளபதி அவர்களின் நோக்கங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பது குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

மேலும், கூட்டத்தில் கலந்து கொண்ட பகுதி மக்கள் இப்பகுதியில் நிலவும் பல்வேறு அடிப்படை சதிகள் கடந்தஆட்சியாளர்களால் ிறைவேற்றப்படவில்லை எனகோரிக்கைகளை முன்வைத்தனர்.அந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் கேட்டறிந்து, தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வந்ததும் நிச்சயமாக ிறைவேற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள்,சார்பு அணியினர் மற்றும் தொண்டர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர்/ துணைத்தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (05.01.2026) அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரவலசு ஊராட்சியில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார்கள். உடன்சென்னிமலைவட்டாரவளர்ச்சிஅலுவலர்கள்உட்படபலர்உள்ளனர்.



ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர்/ துணைத்தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ் தலைமையில் (05.01.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி முன்னிலையில், மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , திட்ட இயக்குநர் (மாவட்ட வளர்ச்சி முகமை) பிரியா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (06.010.2026) கோபிசெட்டிபாளையம், கூகலூர் பகுதியில் விவசயிகளிடமிருந்து கரும்பு கொள்முதல் பணியை பார்வையிட்டு கரும்பினை சுவைத்து பார்த்து, ஆய்வு மேற்கொண்டார். உடன் இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) ப.கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.

## அனைத்து இந்திய பத்திரிக்கை ஆசிரியர் வெளியீட்டாளர் சங்கத்தின் கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர் மற்றும் வெளியிட்டார்கள் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் இன்று மாநில தலைவர் லையன் எஸ். ராஜேந்திரன் அவர்களின் ஆணைப்படி நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாநில துணைத்தலைவர் பி ஜோதி நரசிம்மன் தலைமை தாங்கினார். மாநிலத்துணைச்செயலாளர் இரமேஷ்பாபு, மாநில துணைத்தலைவர் பச்சையா பிள்ளை, மாநில துணை செயலாளர் முத்துக்குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஹரிராஜன் வரவேற்றார். இந்தக் கூட்டத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் புதிய தலைவராக ஜெயபால், கௌரவத் தலைவர் தர்மலிங்கம், மாவட்ட செயலாளர் ஸ்ரீ பாலாஜி , மாவட்ட பொருளாளர் வீரக்குமார், மாவட்டத் துணைத் தலைவர்கள் கவியரசன், குமரவேல், மாவட்டத் துணைச் செயலாளர் பிரகாஷ், மாவட்ட சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் முருகன் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் பாஸ்கர், வெங்கடேசன், அபுதாகிர்,சுபாஷ்சந்திரபோஸ், குமார், சுரேஷ், திருமலை,உதயகுமார்ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இந்தக் கூட்டத்தில் பத்திரிக்கையாளர்களுக்கு தனி பாதுகாப்பு சட்டம் இயற்றவேண்டும்.கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து பத்திரிக்கையாளர்களுக்கும் மற்ற மாவட்டங்களில் உள்ளது போல் இலவச வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும். மாவட்ட மற்றும் வட்டார அளவில் அனைத்து செய்தியாளர்களும் தமிழ்நாடு அரசின் நலவாரியத்தில் உறுப்பினராக சேர்க்க உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வட்டார செய்தியாளர்களுக்கும் ஆட்சியர் அடையாள அட்டை வழங்கவேண்டும்உள்ளிட்ட முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இந்த கூட்டத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்து செய்தியாளர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் (05.01.2026) அன்று சென்னையில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவ,மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டம், சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.உடன் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மாநகராட்சி மேயர் நாகரத்தினம், துணை மேயர் செல்வராஜ், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மலர்விழி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (06.010.2026) நேற்று கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வெள்ளாளபாளையம் பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் பொங்கல் பரிசு தொகுப்பை பெற டோக்கன்கள் வழங்கப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) ப.கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.

## ஈசி வாட்டர் இந்தியா நிறுவனத்தின் இயற்கை நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பத்திற்கு மத்திய அமைச்சர் பாராட்டு



ஈரோட்டில் நடைபெற்ற பாஜக விவசாய வேளாண்மை கண்காட்சியில் ஈசி வாட்டர் இந்தியா நிறுவனத்தின் சார்பாக அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்கிற்கு மத்திய வேளாண்மை துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் வருகை தந்தார்.

அமைச்சரை வரவேற்ற அக்னி ராஜேஷ், விவசாய நிலங்களில் போர்வெல் உப்பு நீரால் ஏற்படும் பாதிப்புகளை நீக்கிடும்வகையில்கடின நீரை ஈசி வாட்டர் சாப்ட்னர் கருவி மென்னீராக மாற்றித் தருவதால், நிலத்தின் மண் வளம் மேம்பட்டு, தாவரங்களின் நீர் உறிஞ்சும் தன்மையைசீராக்கிவிளைச்சல்அதிகரிக்கிறதுஎன்று விளக்கினார். மேலும் வீடுகளில் உப்புநீரால் ஏற்படும் அனைத்து பாதிப்புகளில் இருந்தும் தீர்வு தரக்கூடிய பராமரிப்பு இல்லாத கருவி என்றும், நீரின் நான்காவது நிலை(EZ)தொழில்நுட்பத்தில் இயற்கையான முறையில் ஈசி வாட்டர் சாப்ட்னர் கருவி செயல்படுகிறது என்பதையும் எடுத்துக் கூறினார். இயற்கை முறையில் கடின நீரை மென்நீராக மாற்றும் இந்த தொழில்நுட்பம் அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்று சேர்ந்து அனைவரும் பயன்பெற வேண்டும் என்று அமைச்சர் வாழ்த்திப் பாராட்டினார்.

## TARARDAC சங்கத்தின் மானாமதுரை ஒன்றிய குழுவினர் ஒன்றிய அரசுக்கு எதிராக போராட்டம்

*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் என்கிற பெயரை மாற்றி, நிதியை குறைத்து, 100 நாள் வேலை திட்டத்தை சீர்குலைக்க புதிய சட்டத்தை நிறைவேற்றி இருக்கும் ஒன்றிய பாஜக மோடி அரசை*



*கண்டித்து மாநிலம் முழுவதும் சட்ட நகலை கிழித்தெறியும் போராட்டமானது தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு ஒரு உரிமைகளுக்கான சங்கங்களின் சார்பில் அனைத்து பிடிஓ அலுவலகம் முன்பாக நடைபெற்று வரும் நிலையில், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வீடியோ அலுவலகம் முன்பாக TARATDAC-யின் மானாமதுரை ஒன்றிய குழு சார்பாக மாவட்ட குழு உறுப்பினர் ராஜேந்திரன் மற்றும் ஒன்றிய தலைவர் முருகேசன் ஆகியோரின் தலைமையிலும், கௌரவ தலைவர் சுப்பிரமணியன் ஒன்றியகுழுசங்கர்அம்பேத்கர்மற்றும்அன்னலட்சுமி ஆகியோர் முன்னிலையிலும் போராட்டம் நடைபெற்றது.*

*கிராமப்புறவறுமையைஒழிக்கவும்,வேலையின்மை காரணமாக கட்டாய இடப்பெயர்வை தவிர்க்கவும், கடந்த2005ஆம்ஆண்டுகொண்டுவரப்பட்டதிட்டமான மகாத்மா காந்திய தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பெயரை மாற்றி விக்சித் பாரத் – கேரண்டி ஃபார் ரோஜ்கர் அண்ட் அஜீவிகா மிஷன் (கிராமின்) வி பி ராம்(ஜி)என பெயர் சூட்டி காந்தியின் பெயரை எடுத்ததோடு, விவசாய வேலை நடைபெறும் காலங்களில் 100 நாள் வேலை கொடுக்கத் தேவையில்லை என்றும், நூறு நாள் வேலை என்பது சட்டபூர்வமான உரிமை என்பதை மாற்றி அரசு நினைத்தால்வேலைகொடுக்கலாம்,கொடுக்காமலும் இருக்கலாம் என்பதோடு, இவ்வளவு காலமாக என்ன வேலை செய்ய வேண்டும் என்பதை அந்தந்த பஞ்சாயத்துக்கள் மட்டுமே உறுதி செய்த நிலையில், இனி வரும் காலங்களில் ஒன்றிய அரசே வேலை தீர்மானிக்கும் என்பது, காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் பயோமெட்ரிக் வருகை பதிவேடு என்பது முற்றிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு எதிரானது.*

*இந்த படுமோசமான மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு விரோதமான பல்வேறு சரத்துகளுடன் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத்தை ஒன்றிய அரசு சட்டமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றி உள்ளது. இச்சட்டம் அமலுக்கு வந்தால் கட்டாயம் 100 நாள் வேலை என்பது பறிபோகும் சூழ்நிலை ஏற்படும் என்பதால் மாற்றுத் திறனாளிகள் தங்கள் எதிர்ப்பை ஒன்றிய அரசுக்கு எதிராக பதிவு செய்தனர்.*





தேவகோட்டை சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் மூன்றாம் பருவத்திற்கான தமிழக அரசின் விலையில்லா புத்தகங்கள்,நோட்டுக்களை பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமையில் பெற்றோர் ஆசிரியர் கழக பொறுப்பாளர்கள் உஷா மற்றும் சுகுணா ஆகியோர் வழங்கினார்கள். ஆசிரியர்கள் ஸ்ரீதர் , முத்துலெட்சுமி ஆகியோர் நிகழ்விற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.ஏராளமான பெற்றோர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சர் ஸ்டாலின் ஈரோடு மாவட்டம் சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் 3 புதிய மினி சிற்றுந்துகளை காணொளிக்காட்சி வாயிலாக பக்தர்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற அறிவிப்பின் படி 2024-2025-ல் திருக்கோயில்நிதிமூலம் சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் மூன்று புதிய மினி சிற்றுந்துகள் கொள்முதல் செய்தல் பணிக்கு ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் என அறிவித்தார்கள்.*

*அதன்படி, பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளிக் காட்சி வாயிலாக மூன்று புதிய சிற்றுந்துகளை பக்தர்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்த பக்தர்கள் மலைக்கோயிலுக்கு செல்ல அடிவாரத்திலிருந்து 1320 திருப்படிகள் கொண்ட படிவழிப்பாதையும், வாகனங்கள் மூலம் செல்ல 3.9 கி.மீ நீளமுள்ள தார் வழிச்சாலையும் உள்ளது.பக்தர்கள் அடிவாரத்திலிருந்து மலைக்கோயிலுக்கு சென்றுவரதிருக்கோயில் மூலம் இரண்டு பேருந்துகள் மட்டும் இயக்கப்பட்டு வந்தது. சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு வாராந்திர செவ்வாய்க்கிழமைநாட்களில்சுமார் 10.000 நபர்களும், மாதாந்திர அமாவாசை, சஷ்டி,கிருத்திகைநாட்களில் சுமார் 5,000 நபர்களும், இதர உற்சவ நாட்களான சித்திரை-1 20000 பக்தர்களும், வைகாசி விசாகம்- 7,000 பக்தர்களும், ஆடி அமாவாசை 25,000 பக்தர்களும், கந்த சஷ்டி சூரசம்ஹாரம் 20,000 பக்தர்களும், வருடாந்திர தைப்பூச தேர்த்திருவிழா நாட்களில் 100000 பக்தர்களும், பங்குனி உத்திர தேர்த்திருவிழாவிற்கு 20,000 பக்தர்களும் வருகை புரிந்து வருகிறார்கள். திருக்கோயிலுக்கு வருகை புரியும் எண்ணற்ற பொதுமக்களுக்கு இந்த புதிய சிற்றுந்துகள் பயனளிக்கும் வகையில் அமையும்.*



*இந்நிகழ்வில் மாவட்ட அறங்காவலர்கள் நியமனக்குழுதலைவர்எல்லப்பாளையம் ஈ.இரா. சிவக்குமார், ஈரோடு மண்டலஇணைஆணையர் அ.தி.பரஞ்ஜோதி, உதவி ஆணையர் இரா. சுகுமார். சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி அசோக், திருக்கோயில் செயல் அலுவலர் ஏ.கே.சரவணன் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் ர.பழனிவேல்,அறங்காவலர்குழு உறுப்பினர்கள் மு.மனோகரன் மற்றும் வே.செ.பாலசுப்ரமணியம். கண்காணிப்பாளர் சி.மாணிக்கம் பெருந்துறை சரக ஆய்வாளர் அ.ஸ்ரீ குகன். திருக்கோயில் பணியாளர்கள் அர்ச்சகர்கள் மற்றும்பக்தர்கள் உட்பட துறைசார்ந்தஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.